DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.309/15

Deposition of Witness: PW 8

| | |
|---|---|
| Name குமரேசன் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.12.2021

கு.வி.மு.ச.பிரிவு **244** ன் கீழ் விசாரணை

நான் தற்போது தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சார்பதிவாளர் அனுமதி கடிதத்தை கொண்டு வந்துள்ளேன். மேற்படி அலுவலகத்தில் கடந்த 4.12.14 அன்று கிரய இரத்து பத்திரம் சௌந்தராஜன், சுருளியம்மாள் ஆகியோரால் எழுதிக்கொள்ளப்பட்டு ஆவணஎண் 8185/2014 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணமானது ஆவணஎண் 182/2012 இதே அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த கிரய ஆவணத்தை இரத்து செய்துள்ளது. ஆவணஎண். 8185/2014 ன் சான்றிட்ட நகல் மசாஆ.6. அந்த ஆவணம் மேற்படி அலுவலகத்தில் மேற்படி தேதியில் மாலை 6 மணியிலிருந்து 6.05 மணிக்குள் பதிவு செய்யப்பட்டுள்ளது. சார்பதிவாளர் அலுவலகங்களில் பத்திர பதிவு நடைபெற்றதை கண்காணிப்பு கேமராவில் பதிவு செய்யப்பட்டு கட்டணத்தின் பேரில் ஆவண தரப்பினர்களுக்கு நகல் வழங்கப்படும்.